# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 12 இதழ் : 01 ஜனவரி 2026 தனிப்பிரதி - ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-
Vol : 12 Issue No : 01 January 2026 Single Copy – Rs.20/- Annual Subscription Rs.200/-





# மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையை மாற்றி ஜீவனைக் கொடுத்த கர்த்தர்!

நான் அன்பரின் ஊழியத்தில் 25 வருட பங்காளராக இருந்து வருகிறேன். என் மருமகள் உடல் நிலை பாதிப்பால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். அதன்பிறகு சுகமாகி வீட்டிற்கு அழைத்து வந்தோம். அதன்பின் ஓரிரு நாட்களில் மீண்டும் பெலவீனமாகி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருமகளை பரிசோதித்த மருத்துவர்கள் இருதயம் சரியாக இயங்கவில்லை எனக்கூறி, வேறு ஒரு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்படி சொல்லிவிட்டனர். அந்த நேரத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் திருச்சியில் வைத்திருந்த தனிஜெபத்தில் நான் கலந்துக்கொண்டு மருமகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஐயா பாரத்துடன் ஜெபித்துவிட்டு, பயப்படவேண்டாம், சரியாகிவிடும் என சொல்லி அனுப்பினார்கள். மறு நாள் காலையில் என் மகனிடமிருந்து போன் வந்தது. 'மருமகள் இயல்பு நிலைக்கு வந்துவிட்டாள், ICU-யிலிருந்து நார்மல் வார்டுக்கு மாற்றிவிட்டார்கள். நல்ல சுகத்துடன் இருக்கிறாள்' என சொன்னான். மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையிலிருந்த மருமகளை சுகமாக்கிய கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

\- திருமதி.ராஜலெட்சுமி.




**அன்பரின் ஊழியத்தின் பாசமிகு பங்காளர்களுக்கு**

**இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் 2026**

# அன்பரின் ஊழியம்

## ஆசிரியர் உரை



**Dr. ஜேன் ஜாஷ்வா**

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பரின் ஊழிய பங்காளர்கள் ஒவ்வொருவருக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். தேவன் தாமே உண்டு பண்ணி வைத்திருக்கிற சகல நன்மையான காரியங்களையும் நீங்கள் அனுபவிக்கும்படி அவர் உங்களுக்கு அநுக்கிரகம் செய்வாராக!

**அவன் என்றென்றைக்கும் அசைக்கப் படாதிருப்பான், நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன். சங்கீதம் 112:6.** ஆம், நீதிமான் கர்த்தருக்குப் பயந்தவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான். உலகத்தின் சகல காரியங்களும் நம் வாழ்க்கையில் காணப்படுகின்ற அனைத்தும் அசைந்து அழிந்துப் போனாலும் நமக்கு ஒரு அசைவும் ஏற்படாது. அசைவு என்று சொல்லும்பொழுது பாதிப்பு, பயம், தீமை, நம்பிக்கையற்ற தன்மை இவைகள் எதுவும் இருக்காது. ஏனென்றால் நம்முடைய இருதயம் கர்த்தரை நம்பி திடனாயிருக்கும். குறிப்பாக இந்த புதிய வருடத்தில் அநேகருடைய விசுவாசம் தளர்ந்து போகும். ஆனால் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருக்கிற உங்கள் விசுவாசமோ அசைக்கப்படாதிருக்கும். மனிதருடைய ஞானம் இன்னும் அதிகமாக பெருகி, அரசாங்கங்கள், நாடுகள், தலைவர்கள், மக்கள் மத்தியில் புகழ்பெற்றவர்கள் அனைவரும், தேவன் ஒருவர் தேவையில்லை என்று சொல்லும் நாட்கள் வரும். ஆனால் **இவை எல்லாவற்றின் மத்தியிலும் தேவன் மேல் நீங்கள் வைத்திருக்கிற விசுவாசம், நம்பிக்கை அசைக்கப்படாமல் உறுதியாக இருப்பதாக! அப்படியிருக்கும் போது உங்கள் வாழ்வின் பிற பரிமாணங்கள் எல்லாவற்றிலும் நீங்கள் அசைக்கப்படா திருப்பீர்கள்.**

இந்த வருடத்தில் அன்பரின் ஊழியம் மற்றும் தொண்டு பணிகள் அனைத்திலும் கர்த்தருடைய ஆசீர்வாதமும் பெருக்கமும் உண்டாக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஊழியத்தை நேசித்து எங்களுக்காக தினந்தோறும் உங்கள் வீடுகளிலிருந்தே ஜெபிக்க விரும்புகிறவர்கள் 9488932937 என்ற இந்த எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள்.

**டிசம்பர் மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். இந்த மாதம் திருச்சி, நாகர்கோவில், செகந்திராபாத், ராஜமன்றி, விஜயவாடா, திருநெல்வேலி, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். இந்த கூட்டங்களை நடத்துவதற்கு ஸ்பான்சர் செய்யுங்கள்.**

அன்பரின் ஊழியத்தில் பணிசெய்ய நல்ல ஆட்கள் வருவதற்காக ஜெபியுங்கள்.

விசேஷமாக எங்கள் அப்பாவின் நல்ல சுகத்திற்காக ஜெபியுங்கள். எங்கள் அம்மாவின் நல்ல ஆரோக்கியத்திற்காக, பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள். எங்கள் குடும்பத்தினர் அனைவருக்காகவும் ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து காப்பாராக!

# அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

| தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள் | தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள் |
|---|---|
| NAMBIKKAI TELEVISION | ARADHANA TV |
| சனி, ஞாயிறு | வியாழன், வெள்ளி |
| 8:30PM to 9:00PM | 7:00PM to 7:30PM |

## DAILY MIRACLE



EVERY MORNING 5.00AM

YouTube facebook

MINISTRY OF JESUS

https://www.youtube.com/playlist?list=PLYHtK-JBbPlL4pPVDRD0XWzY1JUS3o8p

## CAMERA MAN / VIDEO EDITORS / GRAPHIC DESIGNER

WE'RE HIRING

JOIN US

(Any UG/PG Candidates)
Skills Required: Able to work in Adobe Photoshop
Adobe Illustrator, Coreldraw, Adobe Indesign
Adobe Premire Pro & After Effects
Male / Female, Christians preffered

Apply Now: ministryofjesushr@gmail.com


ஆசிரியர்/வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-



காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627
தெலுங்கு: +91 9944536343
மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org
Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003



# திடன்கொள்! பயப்படாதே!

**புத்தாண்டு சிறப்பு தேவ செய்தி : Dr.ஆனந்த ஸ்திரா**

**கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர். அவர் உன்னோடே இருப்பார். இஸ்ரவேலின் தேவன் உங்களுக்கு பின்னாக உங்களை காக்கிறவராக இருக்கிறார். ஏசாயா 52:12**

**நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள். அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம், உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார். அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை. உபாகமம் 31:6,8**

## கிறிஸ்துவுக்குள் எனக்கு அருமையான தேவ பிள்ளைகளே, அன்பு பங்காளர்களே,

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்! ஒவ்வொரு வருடத்தையும் நம் வாழ்வில் கிருபையாக கூட்டிக்கொடுக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு நாம் துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுப்போமாக! அவர் நமக்கு இந்த வருஷத்தையும் தம்முடைய அளவற்ற நன்மைகளால் முடிசூட்டுவார். அவரது பாதைகள் நெய்யாய்ப் பொழியும். (சங்கீதம் 65:11) கிருபையினாலும், சமாதானத்தினாலும், ஆவிக்குரிய இகபர ஆசீர்வாதங்களாலும் உங்களையும், உங்கள் இல்லங்களையும் அவர் தாமே நிரப்புவாராக. (சங்கீதம் 23:6) (எண். 6:24-26)

ஒவ்வொரு வருடத்தையும் நாம் புதியதாக ஆரம்பிக்கும்பொழுது உலகில் நடக்கும் காரியங்களை எல்லாம் கண்ணோக்கும்பொழுது கர்த்தருடைய வருகை மகா சமீபம் என்று நாம் அறிந்திருக்கிறோம். அதற்கேற்றபடியே பரிசுத்த ஆவியானவருடைய உதவியுடன் நம்மை ஆயத்தப்படுத்தி கொள்வோம். ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு மணி நேரமும் அவருடைய கிருபைதான் நம்மைத் தாங்கிவழிநடத்துகிறது. **(சங்கீதம் 25:12; யாத். 33:14)** ஆகவே எவ்வித பயமும், கலக்கமும் இன்றி தைரியத்தோடு நம்மை படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய கரத்தை பிடித்து முன்னேறுவோம். உங்களையும் உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரையும்

கர்த்தர் தமது மிகுந்த தயவின்படியே நேர்த்தியாக வழிநடத்துவார்.

இந்த வருடம் எனக்கு எப்படி இருக்கும்? இந்த புதிய வருடத்தில் ஆசீர்வாதமான காரியங்கள் மற்றும் அற்புதமான காரியங்களை தேவன் எனக்கு செய்வாரா? அல்லது பழைய வருடத்தினுடைய கண்ணீரின் வாழ்க்கையே தொடருமா? என்று பல கேள்விகள் மனதில் எழுந்துக்கொண்டிருக்கலாம். சோர்ந்து போகாதீர்கள். இந்த வருடம் முழுவதும் மிகுந்த அன்பும், இரக்கமும், கிருபையும் உள்ள தேவனாகிய கர்த்தர் தாமே உங்களோடு வருவார். உங்களுக்கு முன்னும், பின்னும் மகிமையின் மேகமாக அக்கினி ஸ்தம்பமாக பெருங்காற்றுக்கும், வெள்ளத்திற்கும் புகலிடமாக உயர்ந்த அடைக்கலமாக இருப்பார். **(ஏசாயா 32:2)**

நாம் வாழும் இந்த உலகில் நம்பிக்கைக்குரிய நபர்களை கண்டுபிடிப்பது மிகவும் கடினம். ஆனால் நம்முடைய முழு நம்பிக்கைக்குரிய ஒருவர் இருக்கிறார். அவர்தான் நம்மை படைத்த கர்த்தாதி கர்த்தர், ராஜாதி ராஜா, சிருஷ்டிப்பின் ஆண்டவர், சகலத்தையும் தமக்குள் வார்த்தையினால் வல்லமையாக நடத்தி ஆளுபவர். அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமானவர், எப்போதும் ஜீவனோடு இருப்பவர், எல்லாரிலும் மிகப் பெரியவர், பரலோக பிதா, மகா உன்னதமானவர், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர், வானத்திலும், பூமியின் கீழும் எவ்வித சக்திகளாலும் மேற்கொள்ள முடியாதவர். அதே நேரம் தகப்பனை போல நம்மை சுமப்பவர், முன் நடப்பவர், தாங்குபவர், தாயை போல நம்மை ஆற்றி தேற்றி கண்காணிப்பவர் நமக்காக இருக்கிறார். **(உபாகமம் 1:31; ஏசாயா 66: 13)** ஆகவே எதற்கும் சோர்ந்து போகாதீர்கள்.

நமக்காக பரிசுத்த பரலோகத்தை விட்டு தம்முடைய ஜீவனையே நம்முடைய இரட்சிப்பிற்காக கொடுத்த இயேசுவானவர் நம்முடன் எப்போதும் இருப்பவராகவே இருக்கிறார். **(வெளி.1:19; யாத்தி.3:14; எபி.13:8)** அவர் பிதாவின் வலது பாரிசத்தில் எப்போதும் நமக்காக ஜெபித்துக்கொண்டும், நமக்கு உற்ற துணையாக பரிசுத்த ஆவியானவரை (இந்த வருடம்) அனுப்பியும் உங்களை ஆசீர்வதிப்பார். நாம் அவரை மறந்தாலும் அவர் நம்மை மறப்பதில்லை **(மல்கியா 3:6)** கண்மணியை போல நம்மை காக்கிறவர். **(சங்கீதம் 17:8).** ஒரு தாய் தன் பிள்ளையை தேற்றுவது போல நம்மை தேற்றுகிறார். **(ஏசாயா 66:13)** தகப்பன் தன் பிள்ளையை சுமப்பது போல கர்த்தர் நம்மை சுமக்கிறார். **(உபாகமம் 1:31)** ஆட்டுக்குட்டிகளை போல தமது புயத்தால் நம்மை சேர்த்து, தமது மடியில் சுமந்து, கறவலாடுகளை போல மெதுவாக நடத்துகிறார். **(ஏசாயா 40:11)** நம்முடைய வாழ்நாள் முழுவதும் உலகின் முடிவு பரியந்தம் எல்லா நிலைகளிலும், எந்த சூழ்நிலைகளிலும் நம்மோடு இருக்கிறார். **(மத்தேயு 28:20)**

அவர் இந்த வருடத்தில் உங்கள் அனைவரையும் பார்த்து **"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவது மில்லை"** என்று வாக்குக் கொடுக்கிறார். ஆகவே, நீங்கள் பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்று ஆணித்தரமாக கூறுகிறார். **(உபாகமம் 31:6,8)** எனக்கு அருமையான தேவ பிள்ளைகளே, தைரியமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள், உற்சாகமாயிருங்கள், எழும்பி பிரகாசியுங்கள்!

நீங்கள் சர்வ வல்லமையுள்ள தேவனை யும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் அவர் அனுப்பினவரான பரிசுத்த ஆவியானவரையும் முழுமையாக நம்புகிறீர்கள். அவர் உங்கள் மத்தியில் உங்கள் விசுவாசத்தினாலும், அவருடைய மகத்துவமான நாமத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் துதிகளின் மத்தியில் உங்களுடன் வாசம் செய்கிறார். **(சகரியா 2:5; எபேசியர் 3:16; 2 தெச. 2:13; யாத். 20:24)**

இஸ்ரவேல் ஜனங்களை பல நூற்றுக் கணக்கான மைல்கள் வனாந்தரமாயிருந்த இடத்தில் நாற்பது வருடங்கள் மேக ஸ்தம்பத்தினாலும், அக்கினி ஸ்தம்பத்தினாலும்

வழிநடத்தினவர் நம் தேவன். எலியாவை பாதுகாக்கும்படி வந்த பட்சிக்கிற அக்கினி அவரே! **(2 இராஜாக்கள் 1:9,10)** தீர்க்கதரிசியாகிய எலிசாவை மூன்றாயிரத்திற்கும் அதிகமான படைவீரர்கள் திரண்டு கொலை செய்ய வந்தப்பொழுது, அவர்களைவிட மகா பயங்கர மான ராணுவ வீரர்களை அனுப்பி தம் தீர்க்கதரிசியையும், அவர் வேலைக்காரனையும் காப்பாற்றின மகத்துவமுள்ள தேவன் நம்மோடுகூட இருக்கிறார். அவர் இன்றும் தமது வல்லமையிலும், மகத்துவத்திலும், அன்பிலும், மன உருக்கத்திலும் ஒருபோதும் குன்றிவிடவில்லை. எனவே பரிசுத்த வேதாக மத்தில் உள்ள அத்தனை சம்பவங்களும் நமக்காகத்தான் எழுதப்பட்டிருக்கிறது. அவை களை நாம் விசுவாசிக்கும்பொழுது அந்த சம்பவம் நமக்கும் நடைபெறுகிறது.

கர்த்தர் நமக்கு முன்பாக போகும்பொழுது என்ன நடக்கிறது? நம்முடன் இருக்கும்பொழுது, நம்மோடு நடக்கும்பொழுது எத்தகைய வல்லமையான காரியங்கள் எல்லாம் நடக்கிறது? அவர் நம் பின்னால் வரும்பொழுது எப்படி நாம் பாதுகாக்கப்படுகிறோம்? என்பதைக் குறித்து இச்செய்தியில் சுருக்கமாக பார்ப்போம்.

## கர்த்தர் நல்ல மேய்ப்பனாக நமக்கு முன்பாக போகிறவர்!

முதலாவதாக, அவர் மிகுந்த வல்லமையுள்ள, மகத்துவமான தேவனாக இருந்தாலும் நமக்கு அவர் ஒரு நல்ல மேய்ப்பனை போல இருக்கிறார். **(யோவான் 10:11,14)** நாம் அவருடைய பிள்ளைகளாக இருக்கும்பொழுது அவர் நமக்கு முன்பாக மகிமையோடு நடந்து போகிறார். அக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களை பாதை தெரியாத இடத்தில், வனாந்தரமான இடத்தில் வழிகாட்டியாக மேக ஸ்தம்பமாக காட்சி அளித்தது போல இல்லாவிட்டாலும், உயிர்த்தெழுந்த ஆண்டவராக நமக்கு முன் அடிக்கடி காட்சி அளிக்கிறார். ஆவிக்குரிய வாழ்விலும், உலக வாழ்விலும் நாம் எந்த வழியை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை நமக்கு தெளிவுபடுத்துகிறார். நாம் செல்லும் வழியில் உள்ள விக்கினங்களுக்கும், பயங்கரமான சிவந்த சமுத்திரத்தை போன்ற தடைகளையும் நீக்கி அவைகளின் ஊடே நம்மை பத்திரமாய் வழி நடத்துகிறார். **(மீகா 2:13)** இருளில் தோன்றும் வெளிச்சமாக எப்போதும் காட்சியளிக்கிறார். இதை என் வாழ்வில் நான் அனுபவ ரீதியாக பார்த்திருக்கிறேன்.

ஒரு சமயத்தில் நான் ஒரு பட்டணத்திலிருந்து இன்னொரு பட்டணத்திற்கு கூட்டத்திற்காக வாடகை காரில் சென்றுக் கொண்டிருந்தப்பொழுது இரவு நேரத்தில் திடீரென கார் பழுதாகி அப்படியே நின்றுவிட்டது. கார் ஓட்டுனர் எவ்வளவோ முயற்சித்தும் கார் நகரவில்லை. பல மணி நேரங்கள் கடந்துவிட்டது. கார் டிரைவர் அப்படியே உறங்கி விட்டார். நானும் என் உடன் உதவியாளரும் மிகுந்த நடுக்கத்தில் இருந்தோம். ஏனென்றால், அந்த வழியில் (பல வருடங்களாக) திருடர்கள் அதிகமாக இருப்பதை கேள்விப்பட்டிருக்கிறேன். அருகில் ஒரு பெரிய ஆறு ஒன்று வெள்ளமாய் ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றை எளிதில் கடக்க முடியாது. இப்படிப்பட்ட நிலையில் நான் இரு கரங்களை கூப்பி, **"இயேசுவே இஸ்ரவேலின் ஜனங்களை கடுமையான வனாந்தரத்தில் நடத்தின நீர் இப்பொழுது எங்களுக்கு உதவி செய்யும்** என்று கதறி ஜெபித்தேன். ஒரு சில வினாடியில் காருக்கு முன்பாக வெளிச்சம் பிரகாசித்தது. எனக்காக தம்முடைய ஜீவனையே தந்த மிகுந்த மனதுருக்கமுள்ள இயேசு கிறிஸ்து நாங்கள் பயணம் செய்த கார் முன்னால் காட்சியளித்து பழுதாகி நின்ற காரை நடத்திச்சென்றார். இயேசுவின் பின்னாக கார் செல்ல ஆரம்பித்தது. எங்களால் ஆச்சர்யம் தாங்க முடியவில்லை. இரவு 12.30 மணியளவில் பிரகாசமான பரலோக வெளிச்சத்தில் (ஏசாயா 9:2) நாங்கள்

சேர வேண்டிய இடத்திற்கு பத்திரமாக கொண்டு வந்து சேர்த்தார். அப்பொழுது நான் எழுதின பாடல் தான் **"நல்ல மேய்ப்பரே, இயேசு நாதரே! ஜீவன் சத்தியம் வழி நீரே ஐயா! உந்தன் ஆட்டு மந்தையின் சின்ன ஆட்டுக்குட்டி நான் - மெதுவாக நடத்திடுமே!"** என்பதாகும்.

ஆம்! எனக்கன்பான தேவ பிள்ளைகளே! இந்த ஆண்டில் உங்களுடைய ஊழியப் பாதைகளிலும், படிப்பிலும், வேலை ஸ்தலத்திலும், குடும்ப வாழ்க்கையிலும், எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டிய ஒரு இக்கட்டான நிலையிலும் வழிகாட்டியாகிய இயேசுவை நோக்கிப்பாருங்கள். அவர் உங்கள் பாதையை செப்பனிடுவார். கோணலான வழிகளை செவ்வையாக்கி தம்முடைய வழியில் உங்களை நடத்தி முடிவில் மகிமையான, சந்தோஷமான, அற்புதமான நிலைக்கு உங்களை கொண்டு வந்து சேர்ப்பார். (ஏசாயா 45:2; 40:3; 57:14 சங்கீதம் 73:24) உங்களை அறியாமல் வலது புறமாய், இடது புறமாய் சாயும்போது வழி இதுவே என்று கூப்பிடுகிற சத்தத்தை நீங்கள் கேட்பீர்கள். **"நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்"** (ஏசாயா 30: 21) எனவே, இந்த ஆண்டு நீங்கள் சென்ற வருடத்தை போல அழுது கொண்டிருக்க மாட்டீர்கள். **கர்த்தர் உங்களுக்கு இரங்கி, மகத்துவமான அற்புதத்தை உங்கள் மத்தியில் செய்வார்.** (யோபு 5:9; யாத். 34:10; எரேமியா 33:3)

கர்த்தருடைய சீடர்களிடம் இயேசு, நான் சிலுவையில் மரிக்கப்போகிறேன் என்று கூறினதும் சீடர்கள் மிகவும் கலங்கினார்கள். தாங்கள் குருவின் ஊழியமும், தாங்கள் அவரை பின்பற்றுவதும் நிரந்தரமாக நின்றுவிடுமோ என்று பயந்தார்கள். தங்களுடைய எல்லா தொழிலையும் விட்டுவிட்டு மூன்றரை வருடம் உத்தமத்தோடு அவரை பின்பற்றின சீடர்களின் நிலைமை மிகவும் பரிதாபமாக இருந்தது. தங்கள் குருவாகிய இயேசு இறந்துவிட்டால் தங்களுக்கு என்ன நடக்கும்? எங்கே போக முடியும் என்று மிகுந்த வேதனையோடு இருந்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களை பார்த்து **"நீங்கள் கலங்காதீர்கள்! நான் உயிர்த்தெழுந்த பின்பு உங்களை வழி நடத்தும்படி உங்களுக்கு முன்னே கலிலேயாவிற்கு போவேன் அங்கு என்னை நீங்கள் உயிரோடு காண்பீர்கள்"** என்று ஆணித்தரமாய் கூறி அப்படியே செய்தார். (யோவான் 20:19; மாற்கு 14:28; 16:7) அன்பு தேவ பிள்ளைகளே! பயமும், திகிலும், கலக்கமும், கண்ணீரும் நிறைந்த அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டன. புது பெலன், புது உற்சாகம் அவர்களை நிரப்பியது. மிகுந்த தைரியம் வந்தது. உலகத்தையே அசைத்தார்கள். (அப்.1:8; 4:33) உங்களுக்கும் இந்த ஆண்டு கர்த்தர் அப்படியே செய்வார்.

## கர்த்தர் நம்முடைய சத்துருக்களை ஜெயிக்க நம்மோடு இருப்பவர்

நம்மால் மேற்கொள்ள முடியாத சத்துருக்களை வெல்லும்படிக்கும் நம்மை பாதுகாக்கும்படிக்கும் அவர் நமக்கு பின்னால் வருவார். (யாத்தி. 14:19,20) இந்த உலகமானது தனது கடைசி காலத்தை நெருங்க ஆரம்பித்துவிட்டது. நமக்கு எதிரான பல போராட்டங்களும், நம்மால் கிரகிக்க முடியாதவைகளும், மேற்கொள்ளமுடியாத வைகளும் பெருகிக்கொண்டே இருக்கிறது. சத்துருவாகிய சாத்தான் தனக்கு கொஞ்ச காலம் இருக்கிறது என்று எண்ணி பயங்கரமான, கொடுமையான, அசுத்தமான, வஞ்சகமான, கோரமான பாவங்கள், சாபங்கள், ஏவல்கள், கொடுமைகள், அநீதிகளை உலகத்தில் அதிகமாக விதைத்துக்கொண்டிருக்கிறான்.

அத்துடன் பல நம்பிக்கை துரோகங்கள், சுயநீதி, பொய்யான மார்க்க பேதங்கள், மாயா ஜாலங்கள், நம்பத்தக்க அளவில் இருளின் அற்புதங்கள், பணம், பதவி வெறிகள், மற்றும் மத வெறிகளைக் கொடுத்து கோடிக்கணக்கான மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறான். அவர்களை சற்று முன்னேற்றி, அவர்கள் விரும்புவதை செய்து, முடிவில் ஆழ பாதாளத்திற்கு கொண்டு போகிறான். அவனுடைய எண்ணமெல்லாம் உலகம் முழுவதையும் தனது தீய கொடுமையான ஆட்சிக்குள் கொண்டு வரவேண்டும் என்பதாகவே இருக்கிறது. அவன் ஆதி முதல் பொய்யும், தேவனுக்கு விரோதமாக வஞ்சகம் செய்வதில் மிகவும் பெயர் பெற்றவன். வசியப்படுத்துதல், ஏமாற்றுதல், நல்ல காரியங்களை தடை செய்தல், வாழ்நாள் முழுவதும் வியாதிகளால் இம்சித்தல், கடன் தொல்லைகள், திருமணத்தடைகள், குழந்தை பேறு இல்லாமை, வேலை இல்லாமை, குடும்பத்தில் சமாதானம் இல்லாமை, அன்பற்ற பிள்ளைகளின் துரோகங்கள், ஆபாசங்கள் இவற்றால் உலகத்தை கெடுத்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய சர்ப்பனைகள், அவனுடைய தீமையான செயல்கள், நவீன அறிவியல் தொழில் நுட்பங்களின் மூலம் அநேகரை ஏமாற்றி, கிரகங்களுக்கும், நட்சத்திரங்களுக்கும் மேலாக உன்னை ஏறச் செய்வேன் என்று சொல்லி, பெருமையை, அகந்தையை உருவாக்குகிறான். மகா உன்னதமான ஒரே ஒரு தேவனுடைய மகிமையை மறக்க செய்கிறான். வேத தியானம், ஜெபங்கள், தேவனோடு செலவழிக்கும் நேரத்தை, தேவனைத் தேடுபவர்களை கூட கணிசமான முறையில் குறைக்கிறான். எப்பொழுது பார்த்தாலும் டென்சன், அளவுக்கு மிஞ்சின நேர வேலைகள், ஓயாத சண்டைகள், பிரிவினைகள், சமாதானமின்மை, எதிர்பாராத விபத்துகள், சோகங்கள், தீராத வியாதிகள், முறுமுறுப்புகள், தோல்வி மேல் தோல்விகளை கொடுத்து நல்ல தேவபக்தியுள்ள மக்களையும் பின்வாங்க செய்கிறான். இத்தகைய சத்துருவின் செயல்களை எல்லாம் நாம் ஜெயித்து முன்னேறிச்செல்ல கர்த்தர் நம்மோடு இருப்பார்.

உதாரணமாக, இஸ்ரவேல் ஜனங்கள் மிகப்பெரிய அற்புதங்களை கண்டும் சிறு சிறு காரியத்திற்கு தேவனிடமும், அவருடைய தாசனாகிய மோசேயிடமும் முறு முறுத்தார்கள். தங்களை வழி நடத்திய மோசே மீது கல்லெறிய பார்த்தார்கள். களியாட்டுகள் மற்றும் தங்களை வழிநடத்தாத மாயையான காரியங்களை உருவாக்கி அதை வழிபட ஆரம்பித்தார்கள். நிலையில்லாத புத்தி உடையவர்களாக இருந்தார்கள். காரணம் அவர்களுடைய ஆன்மீக வாழ்க்கையை பாதுகாக்க நியாயப்பிரமாணங்கள் இருந்ததே தவிர, ஒரு உள்ளான தேவ பலம் இல்லை, பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசை அவர்களுக்கு இல்லை. ஒரு சமயம் எழுச்சி அடைவார்கள், ஒரு சமயம் இருளின் அதிகாரத்திற்குள் போய்விடுவார்கள். இதனால் தேவன் அவர்களை வெறுத்து அவர்களுக்கு வாக்குக் கொடுத்த சுதந்திர நாட்டை அடைய முடியாமல் செய்தார்.

இன்று கர்த்தர் சுட்டெரிப்பின் ஆவியாக நமக்குள் வாசம் செய்கிறார் **(ஏசாயா 4:3).** சுட்டெரிப்பின் ஆவியானவராகவும், கர்த்தர் நமக்கு பரிசுத்த இரத்தத்தின் கழுவுவதினாலும் நம்மை நிரப்பி இருக்கிறார். இருபுறமும் கருக்குள்ள பட்டயமான அவருடைய பரிசுத்த வார்த்தைகளாலும் நம்மை நிரப்பி இருக்கிறார். இவைகள் எப்போதும் நம்முடைய சரீரத்தையும், ஆன்மாவையும் சுற்றி சுற்றி சுழன்று கொண்டிருக்கிறது. ஆவியானவருடைய மகிமை நம்மை எப்போதும் நிரப்பிக்கொண்டு இருக்கிறது. கொலோசெயர்1:27-ன்படி கிறிஸ்து வானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருக்கிறார். எண்ணிக்கை 10:35,36-ன்படி சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகிமை இஸ்ரவேலின் கூடாரத்தில் அவர்கள் தங்கி இருந்த போதும், பயணம் செய்த போதும் எப்பொழுதும் உடனிருந்தது.

எனவே இந்த மகிமையின் தேவனானவர்

உங்கள் உள்ளத்திலும், உங்கள் இல்லத்திலும், உங்கள் பிள்ளைகளின் மத்தியிலும் இருக்கும் பொழுது ஒரு சத்துருவானவனும் உங்களை மேற்கொள்ள முடியாது. எவ்வளவு பெரிய தடைகள் வந்தாலும் உங்களால் கிரகிக்க முடியாத பெரிய பயங்கரமான சாத்தானின் சோதனைகள் வந்தாலும், கடந்த கால வீழ்ச்சிகள் உங்களை அழுத்தினாலும் இந்த மகிமையின் பிரசன்னத்தினால் நீங்கள் எல்லாவற்றையும் மேற்கொண்டு ஜெய கெம்பீரத்தோடு செழிப்பான கானான் தேசத்திற்கு வருவீர்கள். சோர்ந்து போகாதீர்கள்! ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து, 'தேவனே! மோசேயோடு இருந்த மகிமையின் பிரசன்னம், யோசுவாவோடு, எலியாவோடு, எலிசாவோடு இருந்த மகிமையின் பிரசன்னம், இயேசுவோடும், அவருடைய சீஷர்களோடும் இருந்த மகிமையின் பிரசன்னம் என்னோடும் இருக்கட்டும்' என்று கெஞ்சி பிராத்தனை செய்யுங்கள். அப்படியே **அவர் பிரசன்னம் உங்கள் மத்தியில் இறங்கும். உங்களுக்கு மகத்துவமுள்ள வெற்றியை தருவார். உங்கள் வியாபாரங்கள் செழிப்பாகும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். கடன் தொல்லைகள் நீங்கும். குழந்தையற்ற தன்மை நீங்கும், வீடு இல்லாத தவிப்பு நீங்கும். பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் பிள்ளைகள் நன்றாக படிப்பார்கள், திருமண தடை நீங்கும். உகைப்பிரகாரமாய் நீங்கள் எல்லாவிதத்திலும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். (2 சாமுவேல் 6:11)**

அதுமாத்திரமல்ல, வெறுங்கையாக போன யாக்கோபை சுற்றி தேவ சேனை நடமாடி, அவனை சுற்றியிருந்த எல்லா சத்துருக்களிடமிருந்தும் அவனை விடுவித்து அவனை மிகப்பெரிய ஐசுவரியவானாக மாற்றினது போல உங்களையும் மாற்றும். (ஆதி. 32:1,2) ஏனென்றால், கர்த்தர் யாக்கோபிற்கு வாக்குக்கொடுத்தார். **"நீ பயப்படாதே! நீ எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையாக கல்லின் மேல் படுத்திருக்கிறாய், நீ போகும் இடமெல்லாம் தேவனாகிய கர்த்தர் நான் உன்னை காத்து அந்நிய தேசத்திலிருந்து சொந்த தேசத்திற்கு உன்னை திரும்பி வரப்பண்ணி, உன்னை ஆசீர்வதிப்பேன் நான் சொன்னதை செய்யுமளவும், உன்னை கைவிட மாட்டேன்" (ஆதி. 28:15)** என்கிறார்.

அன்பானவர்களே! அந்நிய தேசத்தில் இருக்கிற உங்கள் பிள்ளைகளுக்கும் கர்த்தர் அப்படியே செய்வார். உங்களை சூழ இந்த உலகில் எத்தனையோ சம்பவங்கள் நடக்கலாம். அவை ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது. எல்லாவற்றையும் அடக்கி ஆளுகிற ஜெயம் கொண்ட சர்வ வல்லமையுள்ள தேவன் உங்கள் கரங்களை பிடித்திருக்கிறார். ஆகவே, எந்த சக்தியும் உங்களை மேற்கொள்ளாது. மலையின் அடிவாரத்தில் இருக்கிற உங்களை கரம் பிடித்து மெதுவாக நடத்தி உன்னதமான மலையின் உச்சியில் உங்களை கொண்டு போய்சேர்ப்பார். ஆமென்!

# கர்த்தர் முற்றுமுடிய இரட்சித்து நம்மை காக்கிறவராக இருப்பவர்

இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியிலே வெளிப்படையான முறையில் கர்த்தர் தாமே காட்சி அளித்தார். அந்த மகிமையை, பயங்கரமான அக்கினியை, அவருடைய மகத்துவமான செயல்களை நேரிடையாகவே ஜனங்கள் கண்டார்கள். எனினும் அவர்கள் உள்ளத்திற்குள் கிறிஸ்துவின் மகிமை செல்லாதபடியால் அவர்கள் ஆத்துமா அழிவிலிருந்து காக்கப்படவில்லை. ஆனால் நமக்கோ சத்திய வேதம் கொடுக்கப் பட்டிருக்கிறது. **சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர்**

**உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார். 1தெச.5:23,24 மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும் படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். எபிரெயர் 7:25** நாம் கிறிஸ்துவின் ராஜ்யமாகிய பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்குமளவும் நம்மை எல்லாவகையிலும், பிழையற்ற, பரிசுத்த வான்களாய் காக்கும்படி சர்வ வல்லமையுள்ள கர்த்தர் பரிசுத்த ஆவியானவராக, வார்த்தையாக நமக்குள் வாசம் செய்கிறார். அவர் ஒவ்வொரு நாளும் தமக்கு ஏற்றவிதமாக நம்மை சீர்ப்படுத்தி, நிலைப்படுத்தி அவரைப்போல மாற்றி விடுகிறார். ஆகையால், **பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள். மத்தேயு 5:48**

**இயேசுவின் சீஷர்களைப் போல, அப்போஸ்தலன் பவுலைப் போல தேசங்களை கலக்கும் சுடரொளி பட்டயங்களாக உங்களை மாற்றுவார். (சகரியா 12:8; கலாத்தியர் 4:14)** பரிசுத்த ஆவியானவருடைய மகிமை, மேக ஸ்தம்பம் சீஷருக்குள் இல்லாத பொழுது, அவர்கள் பயம் நிறைந்தவர்களாகவும், கிறிஸ்துவின் வழியை விட்டு தம்முடைய பழைய வாழ்க்கைக்கு திரும்புகிற பெலவீனப்பாத்திரமாகவும் இருந்தார்கள். அவர்களுக்குள் பெலன் இல்லை. ஆனால் மேலறையில் காணப்பட்ட மகத்துவமான மகிமையான பரிசுத்த ஆவியானவருடைய நிறைவு அவர்களுக்குள் இறங்கினபொழுது அவர்கள் பெலனடைந்து தேசங்களை அசைத்தார்கள். நாவினால் விவரிக்க முடியாத தேவனுடைய பலத்த அற்புதங்களை கொண்டு வந்து தேசங்களில் உள்ள இருளையும், அறியாமையையும் நீக்கி, ஜீவ ஒளியினிடத்தில் ஜனங்களை வழிநடத்தினார்கள். படிப்பறிவு இல்லாத சீடர்களின் மூலம் மிகப்பெரிய எழுப்புதல் தேவ மகிமையால் அவர்கள் சென்ற இடமெல்லாம் காணப்பட்டது. அவர்களை பின்பற்றி பல பரிசுத்த வான்களும் இருளின் அதிகாரங்களை அழித்து, சந்தோஷத்தின், சமாதானத்தின், பெருக்கத்தை தேசங்களில் ஒரு வெள்ளம் போல ஓடச்செய்தனர். திரளான மக்கள் மெய்வழியை கண்டார்கள். கிறிஸ்து இயேசுவின் சிலுவையின் அன்பு உலகமெங்கும் பரவிற்று.

இந்த வருடமும் கர்த்தர் தம்முடைய மகிமையை நம்முடைய தேசத்திலும், பல தேசங்களிலும் வெளிப்படையான முறையில் கொண்டு வருவார். அவருடைய மகத்துவமான மகிமையைக்குறித்து, உத்தம இருதயத்தோடு, உண்மையோடு, பிரதிபலன் கருதாமல் பிரகடனம் பண்ணுகிற ஒவ்வொரு இடத்திலும் இந்த தெய்வீக மகிமையை அவர்கள் காண்பார்கள். மோசேயோடு இருந்த மக்கள் பயங்கரமான தேவனுடைய பிரசன்னத்தை பார்த்தும் இரண்டு பேரை தவிர யாரும் மனந்திரும்பவில்லை. எனவே, மோசேயின் பணிவிடைக்காரன் யோசுவா தன் குரு சென்ற பிறகு, சுமார் 22 லட்சம் மக்களை தான் எப்படி கர்த்தர் சுதந்தரமாக கொடுத்த தேசத்திற்கு நடத்தி செல்வேன் என பயந்தான்.

அப்பொழுது கர்த்தர் "யோசுவா பயப்படாதே, திடன்கொள்! நான் உன்னோடு இருப்பேன், நான் உன்னோடு வருவேன். உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை. நீ பெலன் கொண்டு திடமனதாயிரு நீ உயிரோடு இருக்கும் நாட்கள் எல்லாம் ஒருவனும் உங்களுக்கு தீங்கு செய்ய முடியாது" என்று ஆணையிடுகிறார். அப்படியே அவனோடு கர்த்தர் இருந்தார், அதை நடப்பித்து காண்பித்தார். எனவே, கடைசி வரைக்கும் யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை சரியான பாதையில் நடத்தினான். தேவனுக்கு பயந்த தலைசிறந்த தலைவனாக மாறினான். மோசே எல்லா கலைகளையும் கற்றவன், அறிவு பெருத்தவன். ஆனால் யோசுவா தன் எஜமானாகிய மோசேயின் முன்பாக ஒரு வேலைக்காரனாக இருந்தான். கர்த்தர் மோசேயின் இரண்டு பிள்ளைகளையோ

அல்லது இஸ்ரவேல் ஜனங்களில் மற்றவர்களையோ தேர்ந்தெடுக்காமல் நித்தமும் மோசேயை விட்டு விலகாமல் இருந்த யோசுவாவை தெரிந்துகொண்டு அவனை உயர்த்தினார். கௌரவப்படுத்தினார். ஆளுகைகளை அவனுக்குக் கொடுத்தார். எல்லா சத்துருக்களையும் மடங்கடிக்கும் வெற்றியை கொடுத்தார். தேசத்தை சுதந்தரிக்கும்படி செய்தார்.

எனவே, நீங்களும் யோசுவாவை போல அவருடைய மகிமையின் பிரசன்னத்தில் நீடித்து நிலையாக இருக்கும்பொழுது அற்பமாய் எண்ணப்படுகிற உங்களையும் உயர்த்துவார். கனப்படுத்துவார். மேன்மைப்படுத்துவார். இந்த கடைசி காலத்தில் உங்கள் மூலம் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள அத்தனை பெரிய அற்புதங்களையும் அவர் செய்வார். இன்றைக்கும்கூட கிறிஸ்துவுக்கு விரோதமாய் செயல்படுகிற அதிகாரங்கள். வல்லமைகள் அனைத்தையும் கர்த்தர் புரட்டிப்போட்டு தம்முடைய ஜனங்களுக்காக பரிதாபப்படுவார். அவருடைய நாமத்தின் நிமித்தம் துன்பப்படு கிறவர்களை மீட்டு உயிர்ப்பித்து உயர்த்துவார். மேட்டிமையானவைகள் தாழ்த்தப்படும். தாழ்த்தப்பட்டவைகள் உயர்த்தப்படும். பரிகாசங் கள். ஏளனங்கள். ஏமாற்றங்கள். வஞ்சனைகள். கொடுமைகள் முறியடிக்கப்படும். சாந்தம். அமைதி. நீதி. நேர்மை. சமத்துவம். உண்மை வெல்லும். மோசேயோடு இருந்த கர்த்தர் உங்களோடு கூட எப்போதும் இருப்பாராக! பயப்படாதீர்கள்! திடன் கொள்ளுங்கள்.


## வங்கிக் கணக்குகளின் விபரம்



**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**

**DR. ANANDA STIRA**
**A/C NO. 10848469699**

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
**(10.00 AM - 6.00 PM)**

English WhatsApp No: +91 94889 32937
Tamil WhatsApp No: + 91 95004 87059




மணியார்டர் (MO), காசோலை (Cheque), வரைவோலை (DD), Online Donation (Website) Bank Account,
QR code, UPI, Google pay, Paytm, Phonepe.

---

முகவரி: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம். 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு.
தில்லைநகர். திருச்சி 620018

Paytm G Pay UPI PhonePe







Telugu WhatsApp No: +91 91770 87860

# ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவோம்!

## திருப்பத்தூர் கூட்டத்தில் பங்குபெற்ற மக்களில் ஒரு பகுதியினர்!

✦ நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்.(நீதி 11:30)

✦ ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.(தானி. 12:3)



- கடந்த நவம்பர் மாதம் திருப்பத்தூரில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் ஏராளமான மக்கள் வந்து கலந்துக்கொண்டார்கள். ஆத்தும அறுவடையை கர்த்தர் கட்டளையிட்டார்.
- பாவ, சாப, நோயின் கட்டுகளிலிருந்து அநேகர் விடுதலையானார்கள்.இந்த பணியே இன்றைக்கு மிகவும் முக்கியமான அவசியமான பணியாயிருக்கிறது. ஆகவே ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த நீங்களும் எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.
- கூட்டங்களை நடத்துவதற்கு உங்கள் குடும்பத்தின் சார்பாக ஸ்பான்சர் செய்து தாங்குவதற்கு முன்வாருங்கள். ஏனென்றால் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவன் ஞானமுள்ளவன்!






திருப்பத்தூர் கூட்டத்தை ஒழுங்கு செய்த திரு. முனைவர் ஜெயக்குமார் மற்றும் திரு. பாஸ்கர் அவர்களுக்கும்,
திருப்பத்தூர் கூட்டத்திற்கு
ஸ்பான்சர் செய்த திரு. சலீம் பிரின்ஸ் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.







திரு. விஜயகுமார் & திருமதி. உதய குமாரி



Dr.ரிச்சர்ட் & Dr.Mrs.சுஜா

St.John's B'Ed Nursing Paramedical College-ன் தாளாளர் Mr. விஜயகுமார், Mrs. உதயகுமாரி, அன்பு மருமகன் Dr. ரிச்சர்ட், அன்பு மகள் Dr. சுஜா அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். திருப்பத்தூரில் மிகவும் சிறப்பான முறையில் இந்த கல்லூரியானது இயங்கி வருகிறது.

Women College of Nursing-ல் படித்துக்கொண்டிருக்கிற எண்ணூறுக்கும் அதிகமான மாணவிகளுக்கு ஆன்மீக மற்றும் கல்வியில் சிறந்து விளங்குவதற்கான நல்ல ஆலோசனைகள் கூறப்பட்டு ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

# துதி அறிக்கை

## வலிப்பு நோயிலிருந்து விடுதலையானேன் மகளுக்கு இடம் கிடைத்தது!



நான் வேலூரில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அடிக்கடி வலிப்பு நோய் வரும். அன்பரின் ஊழியத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். Dr. **ஆனந்த ஸ்திரா அவர்கள் எனக்காக ஜெபித்தார்கள். அந்த நாளில் வலிப்பு நோயிலிருந்து நான் விடுதலையானேன்.** அத்துடன் என் மகளுக்கு Vellore CMC-ல் MD படிக்க இடம் கிடைக்க ஜெபிக்கும்படி ஐயாவிடம் சொன்னேன். அதற்காகவும் ஐயா பாரத்துடன் ஜெபித்தார்கள். **தேவ கிருபையால் என் மகளுக்கு** CMC-ல் MD **அனஸ்தீசியா** (Anaesthesia) **படிக்க இடம் கிடைத்தது. தேவனுக்கே மகிமை!**

**- திருமதி. பெல்சி, கன்னியாகுமரி.**

## தற்கொலை எண்ணத்திலிருந்து விடுதலையானேன்!



நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்தவள். ஒரு சகோதரி மூலம் இயேசுவை அறிந்தேன். என்னுடைய இளைய மகன் மரித்துப்போயிருந்த நேரம் மிகுந்த மனவேதனையுடன் இருந்தேன். நானும் மரித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்தேன். அப்பொழுது Dr. **ஆனந்த ஸ்திரா அவர்கள் ரமலாய் என்ற கிராமத்தில் கூட்டத்தை முடித்து, எங்கள் வீட்டிற்கும் அருகில் உள்ள வீட்டிற்கு வந்து தங்கினார்கள். அப்பொழுது நான் ஐயாவை சந்தித்து ஜெபித்து வந்தேன். அதன்பிறகு எனக்குள் இருந்த தற்கொலை எண்ணம் நீங்கி, மிகுந்த ஆறுதலையும், மனதில் சமாதானத்தையும் பெற்றேன். தற்கொலை எண்ணத்திலிருந்து என்னை விடுதலையாக்கிய இயேசுவை இன்று பலருக்கும் அறிவித்து ஏராளமான ஆத்துமாக்களை கர்த்தரிடம் அழைத்து வருகிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

- Mrs. **கலைவாணி (எ) ரெபெக்காள், குடியாத்தம்.**



# அறுவை சிகிச்சையின்றி அற்புத சுகம்

2018-ம் ஆண்டு எனக்கு கல்லடைப்பு பிரச்சனை ஏற்பட்டு வலி. வேதனையினால் தாங்க முடியாத கஷ்டங்களை அனுபவித்தேன். மருத்துவரிடம் பரிசோதனைக்கு சென்றபொழுது உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என சொல்லிவிட்டார்கள். என் மனைவி அந்த நேரத்தில் 7 மாத கர்ப்பிணியாக இருந்தாள். அவளுக்கும் ஆப்ரேஷன் மூலம் தான் குழந்தை எடுக்க முடியும் என மருத்துவர்கள் சொல்லி யிருந்தார்கள். அப்பொழுது சண்முகபுரத்திலுள்ள St. Peter's church-ல் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் முடிந்து ஐயா எங்களுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். அதன்பிறகு படிப்படியாக என்னுடைய வலி குறைந்தது. அதன்பிறகு ஸ்கேன் செய்து பார்த்தபொழுது கல் இல்லை, எல்லாம் நார்மலாக இருக்கிறது என மருத்துவர் சொல்லிவிட்டார். என் மனைவிக்கும் ஆப்ரேஷன் இல்லாமல் சுகபிரசவத்தில் குழந்தை பிறந்தது. இந்த இரண்டு அற்புதங்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

- திரு. பிரபாகரன், தூத்துக்குடி.



# தெளிவான கண் பார்வை கிடைத்தது!

என்னுடைய வலது கண் ஆப்ரேஷன் முடிந்து சரியான பார்வை இல்லை. கண் கலங்கிக்கொண்டே இருக்கும். வெளிச் சத்தை பார்க்க முடியாமல் வீட்டிற்குள்ளே இரண்டு மாதங்கள் இருந்து வந்தேன். கண் மருத்துவரிடம் சென்று சிகிச்சை எடுத்தும் பயன் இல்லை. ஆகவே அன்பரின் ஊழியத்திற்கு போன் செய்து என்னுடைய இந்த பிரச்சனைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். நானும் அன்று இரவு அன்பரின் ஊழியத்தில் சாட்சி சொல்வதாக பொருத்தனையோடு ஜெபித்தேன். மறுநாள் காலை 7 மணிக்கு கண் விழித்து பார்த்தபொழுது சூரிய வெளிச்சம் என் கண்ணில் பட்டது. அந்த வெளிச்சத்தை என்னால் தெளிவாக பார்க்கவும் முடிந்தது. இப்பொழுது என் கண்ணில் எந்த பிரச்சனையும் இல்லை. அற்புத சுகத்தை தந்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

- திருமதி. கிரேஸி, கல்லணை.



## பணத்தேவைகள் சந்திக்கப்பட்டது!

என்னுடைய இளைய மகள் கல்லூரியில இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய செமஸ்டர் தேர்விற்கான பணம் செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டேன். கடந்த மாதம் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப் பொழுது ஜெப விண்ணப்பத்தில் என் மகளுடைய படிப்பிற்குரிய தேவைகள் சந்திக்கப்பட வேண்டும் என எழுதிக் கொடுத்து சென்றேன். கர்த்தர் அதிசயம் செய்தார். முன்பின் தெரியாத ஒரு அம்மா எங்களுக்கு போன் செய்து மகளுடைய கல்லூரி படிப்பிற்கான முழு தொகையையும் உங்கள் மகளுக்கு தரும்படி கர்த்தர் சொன்னார் என சொல்லி fees கட்டுவதற்கு உதவி செய்தார்கள். அத்துடன் மகளுடைய இரண்டு ஆண்டு படிப்பிற்கான செலவையும் அவர்களே பொறுப்பெடுத்துக்கொள்கிறேன் எனவும் சொன்னார்கள். இந்த அற்புதத்தை செய்த தேவனை துதிக்கிறேன்.

என்னுடைய நீதிமன்ற வழக்கு முடியாமல் அதிக கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் ஐயா, தீர்க்கதரிசனமாக 'கர்த்தர் வழக்கிலிருந்து உன்னை விடுதலையாக்குகிறார்' என சொன்னார்கள். அதன்படியே அந்த மாதமே வழக்கிலிருந்து நான் விடுதலையாக கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!

- திரு. அலெக்ஸாண்டர், அரியலூர்.



## வெளிநாட்டில் வேலை கிடைத்தது!

நான் GNM (நர்சிங்) முடித்து இருக்கிறேன். என் கணவர் சவுதியில் வேலை பார்க்கிறார். ஆகவே நானும் அங்கு வேலைக்கு செல்வதற்காக பல முயற்சிகள் எடுத்தேன். பல தடைகள் வந்துக் கொண்டேயிருந்தது. திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துக்கொண்டு, என் வேலைக்காக ஜெபிக்கும்படி Dr. ஜேன் ஜாஷ்வா அவர்களிடம் சொன்னேன். சிஸ்டர் எனக்காக பாரத்துடன் ஜெபித்துவிட்டு, 'அடுத்த மாதத்திற்குள்ளேயே உனக்கு வேலையை கர்த்தர் தாமே வாய்க்கப்பண்ணுவார். நீ அடுத்த கூட்டத்திற்கு வேலையுடன் தான் வருவாய்' என சொன்னார்கள். கர்த்தர் அற்புதம் செய்தார். என் கணவர் வேலை செய்கிற இடத்திற்கும் அருகில் உள்ள மருத்துவமனையிலேயே எனக்கு நர்ஸ் வேலை கிடைத்து இருக்கிறது. சவுதி செல்வதற்கான விசா கிடைத்து டிசம்பர் மாதம் வேலையில் சேர கர்த்தர் ஒத்தாசை செய்துள்ளார். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

- திருமதி. ஜெமீமா, அரியலூர்.



# JANUARY 2026

**JAN 01** கர்த்தர் உங்கள் முன்னே போவார்; இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார். (ஏசாயா 52:12)

**JAN 02** நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். (ஏசா.25:4)

**JAN 03** என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும்,அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும். (ஏசாயா 32:18)

**JAN 04** அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான்; நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன். (சங்.112:6)

**JAN 05** சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும். (தீத்து 1:15)

**JAN 06** அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார். (1சாமு.2:9)

**JAN 07** கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்.(நீதி.3:26)

**JAN 08** ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்; உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார். (சங்.21:7)

**JAN 09** கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை. (உபா.32:12)

**JAN 10** உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார். (சங்.121:3)

**JAN 11** நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்; (அப்போஸ்.2:25)

**JAN 12** நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லையென்று, என் வாழ்விலே சொன்னேன். (சங்.30:6)

**JAN 13** நீதிமான் என்றும் அசைக்கப்படுவதில்லை. (நீதி.10:30)

**JAN 14** | அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. (சங்.16:8)

உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன். (எரே.1:8) | **JAN 15**

**JAN 16** | தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும். (1நாளா.4:10)

கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். (சங்.121:5) | **JAN 17**

**JAN 18** | உம்மை உறுதியாய்ப்பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிற படியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். (ஏசா.26:3)

அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அசைக்கப்படுவதில்லை. (சங்.62:6) | **JAN 19**

**JAN 20** | கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி அதற்குத் தண்ணீர்ப்பாய்ச்சி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும்பகலும் காத்துக்கொள்வேன். (ஏசா.27:3)

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். சங்.121:7 | **JAN 21**

**JAN 22** | பறந்து காக்கிற பட்சிகளைப்போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துத் தப்பப்பண்ணுவார். (ஏசா.31:5)

அவர்கள் பயப்படாதபடிக்கு அவர்களைப் பத்திரமாய் வழிநடத்தினார். (சங்.78:53) | **JAN 23**

**JAN 24** | கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார். (2தெச.3:3)

இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை. சங்.121:4 | **JAN 25**

**JAN 26** | கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார். (2தீமோ.4:18)

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். (சங்.91:11) | **JAN 27**

**JAN 28** | அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். சங்.121:7

கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார் (சங்.121:8) | **JAN 29**

**JAN 30** | நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன். (யோவான் 17:12)

நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். சங்.32:8 | **JAN 31**

# S. J. SAVES TRUST



**நன்மைசெய்யப் படியுங்கள், நியாயத்தைத் தேடுங்கள், ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப்பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும்விசாரியுங்கள்.**

**(ஏசாயா 1:17)**

**தயாளகுணமுள்ளவன் தயாளமானவைகளை யோசிக்கிறான்.தயாளமானவைகளிலே நிலைத்தும் இருக்கிறான்.(ஏசாயா 32:8)**

சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டுப்பட்டி, மின்னாம் பள்ளி, ஒட்டப்பட்டி, ராமலிங்க புரம், A.N.மங்கலம், M.பெருமாபாளையம், MGR காலனி, சென்ட்ராயன்பாளையம் ஆகிய கிராம எல்லைப் புறங்களில் உள்ள பிள்ளைகள் 300 பேருக்கு கிறிஸ்துமஸ் புத்தாடைகள், கேக், கிறிஸ்துமஸ் விருந்து தரப்பட்டது.

கிறிஸ்து பிறப்பு பண்டிகையை முன்னிட்டு எவ்வித ஜாதி, மத, இன வேறுபாடும் இல்லாமல் அனைத்து பிள்ளைகளுக்கும் S. J. SAVES TRUST மூலமாக நாம் உதவிகளை செய்து வருகிறோம். டிசம்பர் மாதம் 7-ம் தேதி நம் டியூஷன் சென்டரில் படிக்கிற பின்தங்கிய நிலையில் உள்ள ஏழை எளிய மாணவர்களுக்கு கிறிஸ்துமஸ் அன்பளிப்புகளை வழங்கினோம்.







அத்துடன் பரீட்சை அட்டை, நோட்டுகள், பேனா, பென்சில், ரப்பர், சோப்பு, தேங்காய் எண்ணெய், ரெயின் கோட் மற்றும் புரோட்டின், மருந்து வகைகள் அனைத்தும் தரப்பட்டது. பிள்ளைகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் பெற்றுச் சென்றனர்.

நம்மிடம் உதவி பெற்ற பிள்ளைகளின் பெற்றோர் வாரத்திற்கு 2 நாட்களே கூலி வேலைக்கு செல்கிறவர்கள். ஒரு சில பிள்ளைகளின் பெற்றோர் கிட்னி, கேன்சர் மற்றும் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். ஒரு சில வீட்டில் அப்பா, அம்மா இருவரும் குடிபழக்கத்திற்கு அடிமையானவர்கள். அதனால் பிள்ளைகளுக்குரிய அடிப்படை தேவைகள் மற்றும் பரீட்சை அட்டைகூட வாங்கித்தர முடியாத நிலையில் கஷ்டப்படுகின்றனர். இவர்களுக்கு நாம் கொடுத்த பொருட்கள் அனைத்தும் அதிக உதவியாக இருந்தது.

ஏழை எளியவர்களை எப்பொழுதும் நேசிக்கிற நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலும், பங்காளர்களாகிய உங்களுடைய ஜெபம் மற்றும் உதவியினாலும் இந்த அன்பளிப்புகளை வழங்கினோம். தொடர்ந்து இன்னும் 200 பிள்ளைகளுக்கு புத்தாடைகள் கொடுத்து கிறிஸ்துமஸ் விருந்து தரவேண்டும். இதற்குரிய தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். உங்கள் குடும்பத்தின் சார்பாக ஏழைப் பிள்ளைகளை மறவாமல் தாங்குங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**S. J. Saves Trust - ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய**



**Bank A/C Name:** SJ SAVES TRUST
**Account No: 019150310875369**
**Bank Name: Tamilnadu Mercantile Bank**
**Branch: Palakarai, Trichy**
**IFSC Code: TMBL 0000019**
**A/C Type: Current**


S TRUST
th India






We Are
HIRING
PRAYER WARRIORS
LANGUAGE KNOWN: TAMIL, ENGLISH, TELUGU
ministryofjesushr@gmail.com


WE'RE
HIRING
ministryofjesushr@gmail.com
Typist
TAMIL - ENGLISH


வயதானவர்களை கவனித்துக்கொள்ள பொறுப்பான
ஆண், பெண் உதவியாளர்கள் தேவை!
கல்வித்தகுதி : பள்ளி படிப்பு
வயது வரம்பு : 25 வயது முதல் 40 வரை
தொடர்புக்கு : 9488845628, 9150333889
முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10-வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு,
80 அடி ரோடு
தில்லைநகர், திருச்சி-18

# உலக செய்திகள்



உலகின் முதல் பறக்கும் கார் என அறியப்படும் Alef Model A Ultralight 2 உற்பத்திக்கு தயாரானது. இறக்கை இல்லாமல் நிற்கும் இடத்திலிருந்தே டேக்ஆப் செய்யவும் சாதாரண கார் போல் 4 சக்கரங்களோடு சாலையில் ஓடவும் முடியும் என்பதாலேயே உலகின் முதல் உண்மையான பறக்கும் கார் ஆக இது கருதப்படுகிறது.

இந்த பறக்கும் காரை ஒரு முறை சார்ஜ் செய்தால் 350 கி.மீ. வரை சாலையில் ஓடவும் 170 கிமீ வரை பறக்கவும் முடியும் இந்த பறக்கும் கார் குறிப்பிட்ட சிலருக்கே முதலில் வழங்கப்பட்டு மிகுந்த சோதனைக்கு பின்னர் இது பொது சந்தைக்கு வரும் என Alef Aeronautics நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த காரின் விலை சுமார் ரூ.2.7 கோடி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

சீனாவின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக திபெத் உள்ளது. இமயமலையின் வடக்குப் பகுதியில் உயரமான இடத்தில் திபெத் அமைந்துள்ளது. இந்நிலையில் திபெத்தில் 9.34 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.8 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.



இந்தியாவும், ஜப்பானும் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் எளிமையான வாழ்க்கை முறைகளுக்கு பெயர் பெற்றிருந்தாலும், இந்தியர்களைவிட ஜப்பானியர்கள் நீண்டகாலம் ஆரோக்கியத்துடன் வாழ்கிறார்கள். நம்மைவிட ஜப்பானியர் 10 முதல் 15 ஆண்டுகள் கூடுதலாக வாழ்கின்றனர். அதாவது ஜப்பானியரின் ஆயுடகாலம் 84.8 ஆண்டுகள் எனவும், இந்தியர்களின் ஆயுட்காலம் 70.4 ஆண்டுகள் எனவும் வரையறுக்கப்படுகிறது. மீதமுள்ள நாட்களை நாம் மாத்திரையில் தான் கழிக்கிறோம். இதற்கு காரணம் என்ன என என்றாவது யோசித்துள்ளீர்களா? நம் ஆயுட்காலத்தில் 10 ஆண்டுகள் குறைய நமது உணவு முறைதான் முக்கிய காரணம். நமது உணவுமுறைக்கும், ஜப்பானியர்களின் உணவுமுறைக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன என்பதை காண்போம். தண்ணீர் எண்ணெய் ஜப்பானில் எண்ணெய் பயன்பாட்டை விட தண்ணீர் பயன்பாடு அதிகமாக உள்ளது. அதாவது நாம் அதிகம் எண்ணெயில் வறுத்த, பொறித்த உணவுகளையே விரும்புகிறோம். அதிகம் எண்ணெயிலதான் சமையலை செய்கிறோம். ஆனால் ஜப்பானில் வேகவைத்தலே அதிகம் பின்பற்றப்படுகிறது.

திருச்சியில்

LIVE **MY DELIVERANCE CHURCH**

2026

ஜனவரி **10** (சனிக்கிழமை)

# விடுதலையின் இரவு

**நேரம் : மாலை 6:00 மணி முதல் இரவு 8:30 மணி வரை**



டெலிவரன்ஸ் சர்ச்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10-வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு
80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி-18

**தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா குடும்பத்தினர்**

பரவசமூட்டும் ஆராதனை! அனல் பறக்கும் தேவவார்த்தை! விடுதலையின் ஜெபம் !
வாருங்கள்! ஆசீர்வாதம் பெற!

1. கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்
2. my deliverance church youtube channel வாயிலாக இக்கூட்டத்தை நேரலையிலும் பார்த்து பயனடையலாம்.
3. வியாதி, சத்துரு போராட்டம், கடன் பாரம், வேலை இல்லாமை மற்றும் பல்வேறு பிரச்சனைகளினால் துயரப்படும் மக்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

**தொடர்புக்கு : 99421 66066 & 94888 45627**

திருச்சியில்

ஜனவரி **31** (சனிக்கிழமை)

# அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

**நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை**

**தேவ செய்தி: Dr.ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்**

அன்பரின் ஊழிய ஜெப மையம், 10வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு, (80அடி ரோடு), தில்லைநகர்,திருச்சி - 18

# செகந்திராபாத்தில்

ஜனவரி
**13**
செவ்வாய் கிழமை
(அரசு விடுமுறை)

## அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டம்

பாரிஸ் ஹால், சி.எஸ்.ஐ.வெஸ்லி சர்ச்,
மணிக்கூண்டு மற்றும் யசோதா,
மருத்துவமனை அருகில், செகந்திராபாத்.

Local contact: Rev. Sylendra Moses,
Cell:76740 61601

காலை 9:30 முதல் மதியம் 2:00 மணி வரை



# ராஜமன்றியில்

ஜனவரி
**14**
புதன்கிழமை
(அரசு விடுமுறை)

## அற்புதத்தின் மாலை

ஹோட்டல் ஷெல்டன்
APSTRTC Complex ரோடு, ராஜமன்றி

மாலை 5:00 முதல் இரவு 9:00 மணி வரை

தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Bro ஜோனத்தன்
மோசஸ் ராஜ் ஸ்திரா

Contact : **94888 45627** & **90145 51807** (Kiran)

# விஜயவாடாவில்

ஜனவரி
**15**
(வியாழக்கிழமை,
அரசு விடுமுறை)

## அற்புதத்தின் மாலை

ஹோட்டல் ஜலாபுரம் கன்வென்ஷன் ஹால்,
இரயில்வே ஸ்டேஷன் ரோடு,
காந்திநகர், விஜயவாடா

மாலை 5:00 முதல் இரவு 9:00 மணி வரை

**தேவ செய்தி :** Dr.ஆனந்த ஸ்திரா, Bro. ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா

**தொடர்புக்கு : 94888 45627**

திருச்சியில்

புத்தாண்டு வாக்குத்தத்தம் மற்றும்
தீர்க்கதரிசன கூட்டம் 2026

ஜனவரி
03
சனிக்கிழமை



நாகர்கோவிலில்

புத்தாண்டு ஆசீர்வாதக்கூட்டம்



ஜனவரி
10
சனிக்கிழமை

காலை 9:30 முதல் மதியம் 2:00 மணி வரை

புதுவருட வாக்குத்தத்த செய்தி
Dr.ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு, மேற்கு விஸ்தரிப்பு,
(80 அடி ரோடு) தில்லைநகர், திருச்சி.

புதுவருட வாக்குத்தத்த செய்தி
Dr.ஆனந்த ஸ்திரா

இடம் : விஜயதா திருமண மண்டபம்,
WCC ரோடு, நாகர்கோவில்.

தொடர்புக்கு : 94888 45627 , 0431-2741922

# புத்தாண்டு ஆசீர்வாதக்கூட்டம்

காலை 9:30 மணி முதல் மதியம் 2:00 மணி வரை

திருநெல்வேலியில்

ஜனவரி
24
சனிக்கிழமை

ப்ளாரன்ஸ் ஸ்வைன்சன்
காது கேளாதோர் பள்ளி
குலவணிகர்புரம்,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

ஜனவரி
26
திங்கள் கிழமை

மார்த்தாண்டத்தில்

YMCA Hall,
அரசு மருத்துவமனை அருகில்,
வெட்டுவெண்ணி ஜங்சன்,
மார்த்தாண்டம்.

தேவ செய்தி : Dr.ஆனந்த ஸ்திரா, திருமதி.மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : 94888 45627, 0431-2741922